**மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள், சென்னையில் நடைபெற்ற சகோதரி நிவேதிதாவின் 150 வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசியதாவது. (22.02.2018)**

சுவாமி விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவின் 150 வது பிறந்த நாளையொட்டி மேற்கொள்ளப்பட்ட ரத யாத்திரை நிறைவு விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சகோதரி நிவேதிதா அவர்கள் அயர்லாந்திலே கண்ணியமான குடும்பத்தில் பிறந்து இந்தியாவில் டார்ஜிலிங்கில் 1911 ஆம் ஆண்டு மறைந்தார் என்றும், 47 ஆண்டு கால வாழ்க்கையினை இந்தியாவின் மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தார் என்றும் தெரிவித்தார். நோபல் பரிசுபெற்ற மதர் தெரசாவிற்கும், அரவிந்தர் ஆசிரம அன்னையான மீரா அல்பாசாவிற்கும் முன்னோடியாக சகோதரி நிவேதிதா விளங்கினார் என்றும் தெரிவித்தார்.

சகோதரி நிவேதிதா இந்தியாவின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் என்றும், இராமகிருஷ்ணா மிஷன் அவரது பணிகளை மக்களிடையே கொண்டுசென்றது என்றும் தெரிவித்தார்.

மகாகவி பாரதியாருக்கும் குருவாக சகோதரி நிவேதிதா விளங்கினார் என்றும், கல்கத்தாவில் தன்னை காணவந்த பாரதியாரிடம் மனைவியை ஏன் அழைத்து வரவில்லை என்று வினவியதையும், மக்கள் தொகையில் ஐம்பது சதவீதம்

உள்ள பெண்களை தவிர்த்துவிட்டு இந்தியா முன்னேற முடியாது என்று தெரிவித்ததையும் ஆளுநர் நினைவுகூர்ந்தார். பாரதியார் ‘புதுமை பெண்’ என்ற இலக்கியப் படைப்பை அளிக்க சகோதரி நிவேதிதா காரணமாக இருந்தார் என்றும் தெரிவித்தார்.

தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்று கண்டுபிடித்த விஞ்ஞானி திரு. ஜெகதீச சந்திர போஸ் அவர்களுக்கும் ஊக்கமளித்தவர் சகோதரி நிவேதிதா என்று தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் சகோதரி நிவேதிதா அவர்களைப் பற்றி ‘இங்கிலாந்தினால் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட கொடை’ என்று தெரிவித்ததையும் ஆளுநர் குறிப்பிட்டார். விடுதலைப் போராட்ட தியாகிகளான தத்துவமேதை ஸ்ரீஅரவிந்தர், நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் ஆகியோருக்கு நன்கு அறிமுகமானவர் என்றும் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் அவர்களை 1895 ஆம் ஆண்டு முதன்முதலில் லண்டனில் சந்தித்த சகோதரி நிவேதிதா அவர்கள், சுவாமிஜியினுடைய பேச்சுக்களாலும், செயல்களாலும் கவரப்பட்டு 1898 ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு வந்து இயக்கத்தில் சேர்ந்தார் என்று குறிப்பிட்டார். அவருக்கு நிவேதிதா என்ற பெயரைச் சூட்டியதும் சுவாமிஜி அவர்கள்தான் என்றும் குறிப்பிட்டார்.

சகோதரி நிவேதிதா, அன்னை சாரதா தேவிக்கும் நெருங்கிய சீடராக விளங்கினார் என்றும் தெரிவித்தார். அன்னை சாரதா தேவி அவர்களைப் பற்றி ‘எளிமையான, கற்பனையிலும் எட்டாத வலிமைவாய்ந்தவர்’ என்று சகோதரி நிவேதிதா குறிப்பிட்டதையும் நினைவுகூர்ந்தார்.

அன்னை சாரதா தேவி அவர்கள், சகோதரி நிவேதிதாவைப் பற்றி குறிப்பிடும்போது ‘எனக்கு செய்யும் பணியைவிட மேலானதாக அவர் எதையும் கருதுவதில்லை‘ என்று தெரிவித்துள்ளார். வெளிநாட்டில் பிறந்தவராக இருந்தாலும் இராமகிருஷ்ணா இயக்கத்தை மிகவும் நேசித்தார் என்றும் தெரிவித்தார்.

சகோதரி நிவேதிதா பெண்களுக்கென்றே தனியாக பள்ளி துவங்கி தன்னுடைய எழுத்துக்கள் மற்றும் பேச்சுகள் மூலமாக சம்பாதித்தவற்றை அதற்காக செலவழித்து, அதில் இந்திய கலாச்சாரத்தின்படியே கல்வி அளித்தார் என்றும் தெரிவித்தார். ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சாந்தி நிகேதன் என்ற கல்வி நிறுவனத்தை தொடங்குவதற்கும் சகோதரி நிவேதிதாவே காரணமாக இருந்தார் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

சகோதரி நிவேதிதா அவர்கள் இந்திய சுதந்திர போராட்டத்திலும் ஈடுபட்டவர் என்றும், ஐரோப்பிய அடக்குமுறைக்கு எதிராக ஜப்பான் நாட்டு எழுத்தாளர் ஓககுரா என்பவருடன் இணைந்து போராடியவர் என்றும் தெரிவித்தார்.

ஓவியத்தின் மீது அவருக்கு இருந்த ஈர்ப்பின் காரணமாக பெங்கால் ஓவியப் பள்ளியைத் தொடங்க காரணமாக இருந்தார் என்றும், இளம் ஓவியர்கள் எல்லோரா ஓவியத்தினை கண்டுவர இரயில் மூலம் அனுப்பிவைத்து ஊக்கப்படுத்தினார் என்றும் தெரிவித்தார்.

ரத யாத்திரையில் சுமார் மூன்று இலட்சம் மாணவர்கள் கலந்துகொண்டது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார். மாணவர்கள் சுவாமி விவேகானந்தர், சகோதரி நிவேதிதா காட்டிய வழியில் செயல்பட்டு நாட்டை முன்னெடுத்து செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சகோதரி நிவேதிதாவின் 150–வது பிறந்தநாள் விழாவினை கொண்டாட சிறப்பான ஏற்பாடுகள் செய்த இராமகிருஷ்ணா மடத்திற்கு தனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்தார்.